RESEARCH ARTICLE

IOR PRESS
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI:10.34256/irjt22320

OPEN ACCESS

# இனக்குழு சமூகத்தில் கொடை

மா. செல்வபிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# Gratuity of Ethnic Community

M. Selvapriya [a, *]

[a] Department of Tamil, Periyar University, Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author: selvapriyatamil1992@gmail.com

Received: 10-12-2021
Revised: 05-05-2022
Accepted: 16-05-2022
Published: 06-07-2022

Check for updates

**ABSTRACT**

This thesis will explain the societal functions of an ethnic community (sirur people). This community comesunder thesirur kings and they have no naming tradition. Muvendars are having the tradition of establishing their name in public but thesesirur'snames have not been found in any literature. They habituated in two different typical places named ooirandsirur. Sirur denotes that a limited population habituated in a place. Sirurpeople do not have much wealth to donate, So they stake their possession objectsto keep their benevolence. It is learned that the sirur people borrowed money to meet their basic food needs. They always have the tradition of sharing whatever they have with others instead of keeping it for them. Further, these traits do not exist in other communities. It shows that the virtue of hospitality belongs to the housessirur people. Sirars goes to the war field as a soldier under the orders of the king and it helps them to earn the sufficient income they need instead of living on the meagre income available in their provenances. Sirur people received sufficient money by working as a soldier and soon they become a superior economy (in marudhanilathur) with high possession as a community. Due to social development, They declared war against the king (vendar) and they are defeated by the king which destroyed the sirur community.

**Keywords:** Non-Naming Tradition, Social Activities, Mortgage Donation, Credit Attribute, Dine Together, Sirur Family Feast, The Failure of the Venthan and the Sirur Poverty, Ethnic Community Destruction.

## முன்னுரை

ஆதிகால மனிதன் தனிமனிதனாக நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டான். அவ்வகையான நாடோடி வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி நீர் வளமிக்க ஆற்றுப்படுகைகளில் வாழ்விடத்தை அமைத்துக்கொண்டு நிலையாகத் தங்கலானான். தனிமனித தேவையை நிறைவு செய்து கொள்ளவும் விலங்குகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும் குழுவாக வாழவேண்டுமென எண்ணினான். தனது குழுவுடன் நிலையாக வாழவும் தொடங்கினான். ஓர் இனத்துடன் குழுவாக வாழ்வது இனக்குழு சமூகமாகும். இவ்வகையான இனக்குழு சமூகமாக வாழ்ந்த சீறூர் மன்னர்களின் வாழ்வியலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பெயர் சுட்டா மரபு

சீறூர் மன்னர்களின் பண்பாட்டைக் கூறுபவையாக மூதின் முல்லை, வல்லாண் முல்லைப் போன்ற துறையில் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. இத்துறையில் அமைந்த பாடல்களில் சீறூர்

மன்னர்களின் இயற்பெயரைச் சுட்டு மரபு காணப்படவில்லை. சீறூர் மன்னர் யார் எனில் 'சீறூர் மன்னர்கள் என்பவர்கள் சங்க காலத்தில் வேந்தர் வேளிர் குறுநில மன்னர்கள் வரிசையில் இனக்குழு வாழ்வின் எச்சங்களுடன் கூடிய சமூகத்திற்குத் தலைவர்களாக இருந்த தொன்மையானது முதுகுடியைச் சேர்ந்தவர்களாவர்" என்கிறார். சீறூர் மன்னர் என்னும் பொதுப்பெயரைச் சுட்டும் மரபானது புறநானூற்றில் 308,328,319 போன்ற பாடல்களில் மூன்று இடங்களில் காணப்படுகின்றன (Pirapu, 2017).

**அட்டவணை 1.** சீறூர் மன்னர் என்னும் பொதுப்பெயர்

| | |
|---|---|
| சீறூர் மன்னர் | சீறூர் மன்னர் சிறியிலை வெஃகம்<br>சீறூர் மன்னனைப் பாடினை செலினே<br>சீறூர் மன்ன னெருநை ஞாங்கர் |

சீறூர் சமுதாயத்தில் காணப்படும் பெயர் சுட்டாத மரபினை மேற்கண்ட சான்றுகளைக் கொண்டு உணரமுடிகிறது. சீறூர் மன்னர்களின் பெயர்கள் சங்கப்பாடல்களில் வெளிப்படையாக இடம்பெறவில்லை என்பதை 'இவர்கள் இயற்பெயரால் எங்கும் குறிப்பிடப்பெறவில்லை. வீரம் சார்ந்த பெயர்களாலும் மன்னர் என்னும் பெயராலும் மட்டுமே குறிப்பிடப் பெற்றுள்ளனர்" என்று பெ. மாதையன் கூறுகிறார். இதன்மூலம் சங்கப்பாடல்களில் சீறூர் மன்னர் என்ற பொதுப்பெயர் மட்டும் வெளிப்படுகிறது என்பது தெளிவாகிறது (Mathaiyan, 2012).

சீறூர் சமுதாயத்தில் காணப்படும் தொன்மை, விருந்து பேணும் பண்பு, வீரத்தின் திறன் போன்ற பண்புகளின் அடிப்படையில் சீறூர் மன்னர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. தொன்மை என்பதைக் குறிக்கும் மூதிலாளன் (புறம்.289) என்ற பெயரும், விருந்து பேணும் பண்பினைக் குறிக்கும் வருவிருந்தயரும் விரும்பினள் கிழவன் (புறம்.326) என்ற பெயரும் வீரத்தினால் உண்டான திறனைக் கூற காளை (புறம்.312,334) நெடுந்தகை (புறம்.327,329) வண்மையோன் (புறம்.330) வல்லன் (புறம்.331) மறவன் (புறம்.332) இறைவன் (புறம்.316) கைம்மான் வேட்டுவன் (புறம்.320) குருசில் (புறம்.321) வேலோன் (புறம்.322) ஆகிய பெயர்களும் கையாளப்பட்டுள்ளன (Durai Samippillai, 1947).

**அட்டவணை 2.** சீறூர் மன்னனின் பண்புப்பெயர்கள்

| மூதிலாளன் | மூதிலாள ருள்ளுங் காதலின் |
|---|---|
| வருவிருந்தயரும்விரும்பினள் கிழவன் | வருவிருந் தயரும் விருப்பினள் கிழவன் |
| காளை | களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே<br>உரவுவேற் காளையுங் கைதூ வானே |
| நெடுந்தகை | வரகுகட னிரக்கு நெடுந்தகை உரைசால்<br>நெடுந்தகை யோம்பு மூரே |
| வண்மையோன் | தொன்மை சுட்டிய வண்மை யோனே |
| வல்லன் | தூவவும் வல்லனவன் றுவுங் காலே |
| மறவன் | மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே |
| மிறைவன் | அவனெம் மிறைவன் யாமவன் பாணர் |
| கைம்மான் வேட்டுவன் | கைம்மான் வேட்டுவன் கனை துயில் |
| குருசில் | செருவெங் குருசி லோம்பு மூரே |
| வேலோன் | கண்படை யீயா வேலோ னூரே |

மேற்கண்டவற்றின்படி சீறூர் மன்னர்களின் பெயர் சுட்டும் மரபானது வெளிப்படையாகச் சுட்டப்படுதலின்றிப் பண்புப் பெயர்களால் பலவாறு சுட்டப்பட்டவை என்பது தெளிவாகிறது.

## ஊர் என்ற பெயர் நிலை

ஊர் என்ற சொல்லானது குறிப்பிட்ட அளவிலான மக்கள் வசிக்கும் குறுகிய நிலப் பகுதியைக் குறிக்கும். சீறூர் மன்னரின் சமுதாயத்தை உணர்த்தும் மூதின்முல்லை, வல்லாண் முல்லை போன்ற பாடல்களிலுள்ள ஊர் என்ற பெயரானது சீறூர், ஊர் என்று இருவேறாகக் கையாளப்பட்டுள்ளன. சீறூர் என்னும் சொல் புறநானூற்றில் 170,306,308,314,319,328,329,330,331 ஆகிய பாடல்களில் ஒன்பது இடங்களில் காணப்படுகின்றன.

அட்டவணை 3. சீறூர் என்னும் சொல் இடம்பெறும் இடங்கள்

| | |
|---|---|
| சீறூர் | பரலுடை முன்றி லங்குடிச் சீறூர் |
| | அரிதுண்கூவ லங்குடிச் சீறூர் |
| | சீறூர் மன்னன் சிறியிலை யெஃகம் |
| | சீறூர் மன்ன னெருநை ஞாங்கர் |
| | புன்புலச் சீறூர் நெல்விளை யாதே |
| | சீறூர் மன்னனைப் பாட்டினை செலினே |
| | இல்லடு கள்ளின் சில்குடிச் சீறூர் |
| | புரவிற் காற்றாச் சீறூர் |
| | வில்லேர் வாழ்க்கைச் சீறூர் |

மேற்கண்ட பாடல்களில் சீறூர் குறித்த செய்திகள் காணப்படுகின்றன. 'அழகியக் குடியையுடையச் சிறியவூரின்கண் (ப.366) உண்ணும் நீர் அரிதாகிய நீர் நிலையில் முள்ளையுடைய கழற்கொடியாலாகிய வேலி சூழ்ந்த அழகிய குடிகளையுடைய சிறிய ஊரில் வாழும் (ப.211) சிறிய ஊரையுடைய சிற்றரசனது சிறிய இலையையுடைய வேல் (ப.215) புன்செய் கொல்லைகளையுடைய சீறூர்களில் நெல்பயிரும் விளையாது (ப.253) இல்லங்களில் அடப்படும் கள்ளினையுடைய சிலவாகிய குடிகள் வாழும் சீறூர் (ப.255) புரவுவரி செலுத்துதற்கு ஆற்றாத வருவாயையுடைய சீறூர் (ப.257) வில்லைக் கொண்டு வேட்டையாடி வாழும் வாழ்க்கையையுடைய சீறூர்க்குரியவனாகி மிக்க வலிமை உடைய தலைவன் (ப.259) எனச் சீறூர் குறித்து வரும் பாடல்களுக்கு ஔவை சு.துரைசாமிப்பிள்ளை உரை விளக்கம் தருகிறார் (DuraiSamippillai, 1947). சீறூர் தொடர்பான பாடலடிகள் சீறூர் மக்களின் குடியிருப்புகளையும், அதன் அமைப்பினையும், பொருளாதார நிலையையும், அவர்களின் வீரத்தையும் கூறுபவையாகக் காணப்படுகின்றன. இக்குடிகள் இயற்கையான அரணை உடையதாகவும், சிறிய குடில்களைக் கொண்டவையாகவும், நெல்விளையாத புன்செய் நிலமாகவும், வரி செலுத்த இயலாத அளவிற்குச் சொற்ப வருவாயை உடையதாகவும், அரிதாகிய நீர்நிலைகளை உடையதாகவும் சித்தரிக்கப்படுகின்றன. மேலும் ஊர் என்னும் சொல் புறநானூற்றின் 318,320,321,322 ஆகிய நான்கு பாடல்களில் காணப்படுகின்றன.

அட்டவணை 4. ஊர் என்னும் சொல் இடம்பெறும் இடங்கள்

| | |
|---|---|
| ஊர் | பசித்தன் றம்ம பெருந்தகை யூரே |
| | உரைசா னெடுந்தகை யோம்பும் மூரே |
| | செருவெங் குருசி லோம்பும மூரே |
| | கண்படை யீயா வேலோ னூரே |

மேற்கண்ட பாடலடிகளில் சீறூர் மன்னர்களுக்குரிய ஊர் நெடுந்தகை ஊர், பெருந்தகை ஓம்பும் ஊர், குருசிலோம்பும் ஊர், வேலோன் ஊர் என சீறூர் மன்னனின் பண்பை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

## சமூகச் செயல்பாடுகள்

### பணையக் கொடை

கொடை என்பது அருள் உள்ளம் கொண்ட அனைவருக்கும் பொதுவானதாகும். கொடை என்னும் பண்பு உள்ளதைக் கொடுக்க வேண்டும் என்ற நிலையை உணர்த்துகிறது. எனினும் சீறூர் மன்னர்கள் சமுதாயத்தில் வாழும் மன்னன் தன்னிடம் பொருள் இல்லாத நிலையில் தன்னுடைய உடைமையான வாளினைப் பிறரிடம் பணையம் வைத்து அதன் மூலம் கிடைக்கும் பொருளைf; கொண்டுத்துள்ளார். 'இரவலர்களுக்கு அளிக்க உறு பொருள் ஒன்றும் இல்லாதபோது இறுதியாகத் தனது பழைய வாளையே ஈடுசெய்து பொருள் வழங்கும் மனமுடையவராய் இருந்தனர் என்கிறார்" (Kailasapathi, 2018). பாணருக்குக் கொடை கொடுத்ததை மதுரை கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் பாடியதை

'இரும்புடைப் பழவாள் வைத்தன னின்றிக்

கருங்கோட்டுச் சீறியாழ் பணைய மிதுகொண்" (Durai Samippillai, 1947)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். பொருளாதார நிலையில் பின்தங்கியவர்களாகச் சீறூர் மன்னர்கள் காணப்பட்ட நிலையில் அவர்களுக்குப் பொருளுதவி தரும் உடைமையாளர்களும் இருந்துள்ளமையால் சீறூர் மன்னர் சமுதாயத்திலும் பொருளாதார நிலையில் உயர்ந்தவர்கள் இருந்துள்ளமைக்குச் சான்றாக உள்ளது என்பது தெளிவாகிறது.

### கடன் பெறும் பண்பு

சீறூர் மன்னர்களிடம் கடன் பெறும் பண்பு காணப்படுகிறது. தன்னுடைய சொந்த உழைப்பினால் கிடைத்த வரகினை இரவலர்க்குக் கொடுத்தல் என்பது சீறூர் மன்னர்களின் இயல்பு. 'வரகைக் கடனாகப் பெற்று விருந்து பேணுபவராகவும் சீறூர் மன்னர் காட்டப் பெற்றுள்ளனர்" என்கிறார் (Mathaiyan, 2012). ஆனால் இருப்பில் உள்ள வரகினை எல்லாம் இரவலர்க்குக் கொடுத்துத் தீர்ந்த நிலையில் பின்னர் வரும் சுற்றத்தாருக்கு உணவுக்கொடை கொடுக்க இயலாத நிலை உண்டாகிறது. இந்நிலையில் வரகினைக் கடன் பெற்று வழங்கும் நிலையையும் பாடல் சுட்டுகின்றது. இதனை,

'சில்விளை வரகின் புல்லென் குப்பை

தொடுத்த கடவர்க்குத் கொடுத்த மிச்சில்

பசித்த பாண ருண்டுகடை தப்பலின்

ஒக்க லொற்கஞ் சொலியத் தன்னூர்ச்

சிறுபுல் லாளர் முகத்தளவ கூற

வரகுகட னிரக்கு நெடுந்தகை" (Durai Samippillai, 1947)

என்னும் மூதின் முல்லை துறை சார்ந்த பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன. 'தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுத்து வறுமைநிலை அடைந்துள்ளனர் சீறூர் மன்னர்கள். வறுமை நிலையில் உள்ளூர் உடைமையாளர்களிடம் கடன் பெற்ற சீறூர் மன்னர் அடுத்த நிலையில் வேந்தர் பொருட்டுப் போரில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேந்துவிடுதொழில் சீறூர் மன்னரை உடைமையாளராக உயர்த்துகிறது" வறியவரான சீறூர் மன்னர் பின்னர் தன் ஊரில் உள்ள பிற உடைமையாளர்களிடம் பொருளைப் பெற்று வாழ்ந்த நிலையையும் உணரமுடிகிறது (Mathaiyan, 2012).

## கூட்டுண்ணல்

கூட்டுண்ணல் என்னும் மனிதப் பண்பு இனக்குழு மக்களிடம் காணப்படுகிறது. அவற்றுள் மிகவும் முக்கியமானது கூட்டுண்ணலாகும். இனக்குழு மக்களின் பகுத்துண்டல் பண்பாட்டை கா. சுப்பிரமணியன் பின்வருமாறு கூறுகிறார். 'இனக்குழு மக்கள் கூட்டு வாழ்க்கை நடத்தினர்; கிடைத்ததைப் பகுத்துண்டனர்" (Suppiramaṇiyan, 2011). மேலும் கூட்டுண்ணலை ராஜ் கௌதமன் பின்வருமாறு கூறுகிறார் 'ஈகைக்கு முந்தைய சமூகக் குழுக்களில் பாதீடு என்னும் பகுத்துண்ணல் கூட்டுண்ணல் குழுச்சமூக இணக்கத்தைப் பிரிபலித்து வந்தது" கூட்டுண்ணல் என்னும் பண்பானது சீறூர் மன்னர்களிடம் காணப்படுகிறது (Raj Kauthaman, 2008).

'கானக் கோழியொ டிதல்கவர்ந் துண்டென

ஆர நெருப்பி னார னாறத்

தடிவார்ந் திட்ட முழுவள் ளூரம்

இருப்பே ரொக்கலொடு டொருங்கினி தருந்தித்

தங்கினை சென்மோ பாண" (Durai Samippillai, 1947)

என்னும் இப்பாடலில் சீறூர் மன்னர் குறித்து வீரை வெளியனார் பாடுகிறார். காட்டுக் கோழியையும் இதழ் பறவையையும் கவர்ந்து துண்டு துண்டாக வெட்டி சந்தனக் கட்டையின் நெருப்பிலே காட்டி எடுத்தக் கறியைப் பெரிய உறவினருடன் ஒன்றாகக்கூடி உண்டு தங்கிச் செல்லும்படி குறிப்பிடப்படுவதால் பாணரின் குழுக்களுக்குச் சீறூர் மன்னர்கள் விருந்து பேணியதை உணரமுடிகிறது.

## சீறூர் மனையாள் விருந்து

விருந்து என்பது முன்பின் அறியாத பசித்தவருக்கு உணவு பேணும் பண்பைக் குறிப்பதாகும். சீறூர் மன்னர்களின் மனைவி விருந்தோம்பும் பண்பு உடையவளாகக் காணப்படுகிறாள். நாளும் விருந்தினர் வரவேண்டும் நாளும் அவர்களை உபசரிக்க வேண்டும் எனச் சீறூர் மன்னரின் மனைவி தனது முன்னோர் வழிபாட்டில் கூறியதை

'ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை

நடுகற் கைதொழுது பரவு மொடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே" (Durai Samippillai, 1947)

என்ற அள்ளூர் நன்முல்லையாரின் பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. நாளும் விருந்தினர் வர வேண்டும். அவர்களை உபசரிக்க வேண்டும் என நடுகல்லை வழிப்பட்ட சீறூர் மன்னன் மனையாளின் செயல்பாடானது வெளிப்படுத்தப்படுகிறது. இதன்மூலம் விருந்தோம்பலுக்கு அவர்கள் அளித்த முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. மேலும் சீறூர் மன்னனின் மனையோள் பாணருக்கும் அவர்களுடன் வந்த சுற்றத்தாருக்கும் விருந்து பேணியதை

'யாணர் நல்லவை பாணரொ டொராங்கு

வருவிருந் தயிரும் விரும்பினள்" (Durai Samippillai, 1947)

அவர்களுடன் வரும் உறவினருக்கும் விருந்து பேணும் பண்பு உடையவளாகச் சீறூர் மன்னனின் மனைவி காணப்படுகிறாள். மேலும்

'சென்றதன் கொண்டு மனையோள் விரும்பி" (Durai Samippillai, 1947)

'.................றுரே மனையோள்

பாண ரார்த்தவும் பரிசில் ரோம்பவும்" (Durai Samippillai, 1947)

ஆகிய பாடலடிகளும் சீறூர் மன்னனின் மனையாள் விருந்து பேணியதை எடுத்துக்காட்டுகின்றன. பிற குறுநில மன்னர் மற்றும் வேந்தர்களது மனைவியரைக் காட்டிலும் சீறூர் மன்னனின் மனைவியர் சமூகத்தோடுத் தொடர்பு உடையவர்களாகக் காணப்படுகின்றனர். 'குறுநில மன்னர் வேந்தர் ஆகியோரின் தலைவியர் அந்தப்புர மகளிராக வாழ்ந்தவர் என்பதால் அவர்களுக்குச் சமுதாயத் தொடர்பு இல்லை" என்கிறார் (Mathaiyan, 2012). சீறூர் மன்னர்களின் மனைவியர் சமூகத்தோடு தொடர்புடையவர்களாகக் காணப்படுவதால் விருந்தோம்பல் பண்பில் சிறந்து பேசப்படுகின்றனர். குறுநில மன்னர் வேந்தர் குலமகளிர் சமூகத்தோடு தொடர்பற்றவர்களாக மட்டுமே காணப்படுகின்றனர் என்பது தெளிவாகிறது.

## வேந்துவிடு தொழில்

சீறூர் மன்னர்கள் தங்களுக்கு மேலுள்ள வேந்தர்களின் பொருட்டு வேந்துவிடு தொழிலை மேற்கொள்பவர்களாக இருந்துள்ளனர். 'வேந்துவிடு தொழிலால் மருதநிலம் கிடைக்கப்பெறும் என்றாலும் வீரம் நிலைநாட்டி கிடைக்கப்பெறும் நிலமே சிறந்தது என்ற பொருள் முதல்வாத அடிப்படையில் சீறூர் தலைவன் வேந்துவிடு தொழிலுக்கே சமைந்தான்" என கூறுகிறார் (Irames, 2016). வேந்துவிடு தொழிலின் மூலம் வேந்தருக்கு ஈட்டித்தரும் வெற்றிக்கு ஈடாகப் பல பொருட்களைச் சீறூர் மன்னர்கள் பெறுகின்றனர். அவர்கள் பெறும் பொருள்கள் தன்னிடம் பொருள்வேண்டி வரும் பாணனுக்கும் விறலிக்கும் கொடுக்கப்படும் கொடைப் பொருள்கள் ஆகும். இதற்குச் சான்றாக

'வருவிருந் தயரும் விருப்பினள் கிழவனும்
அருஞ்சமந் ததையத் தாக்கிப் பெருஞ்சமத்
தண்ணல் யானை யணிந்த
பொன்செ யோடைப் பெரும்பரி சிலனே" (Durai Samippillai, 1947)

என்ற தங்காற் பொற்கொல்லனாரின் என்ற பாடலடிகளை எடுத்துக்காட்டலாம். அரிதாகப் பகை நாட்டினரின் போர் கெடும்படியாகப் போர் செய்துப் போரில் ஈடுபட்ட யானையின் முகப்பட்டத்தைப் பரிசாகத் தருவான் சீறூர் மன்னன். சீறூர் மன்னன் சொற்ப வருவாயை உடையவனாகக் காட்டப்பட்ட நிலையிலிருந்து வேந்துவிடு தொழில் மூலம் கிடைத்த பொருளைப் கொடையாக வழங்கும் தன்மை உடையவனாகவும் காணப்படுகிறான் என்பது தெளிவாகிறது.

## வேந்தனின் தோல்வியும் சீறூர் வறுமையும்

சீறூர் மன்னர்கள் இனக்குழுவின் தலைவர்களாகவே செயல்பட்டனர். தங்களது பரப்பை விரிவு செய்யவேண்டும் என்ற எண்ணமற்றவர்களாகவும் குறுகிய எல்லையை உடையவர்களாகவும் காணப்பட்டனர். அதனால் தங்களது எல்லையை உள்ளடக்கிய வேந்தரின் பொருட்டு வேந்துவிடு தொழிலுக்குச் செல்கின்றனர். அத்தொழிலின் மூலம் கிடைக்கும் பொருளால் அவர்கள் வாழ்வாதாரத்தைப் பெற்றனர். அவ்வகையில் வேந்தனின் வெற்றி சீறூர் மன்னர்களுக்குச் செழிப்பையும் வேந்தனின் தோல்வி சீறூர் மன்னர்களுக்கு வறுமையையும் ஏற்படுத்தியது. வேந்தன் போரில் தோல்வியுற்றமையால் சீறூர் மன்னர்கள் அடையும் வறுமை நிலையைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கின்றது.

'கொய்யடகு வாடத் தருவிற குணங்க
மயிலஞ் சாயன் மாஅ யோளொடு
பசித்தன் றம்ம பெருந்தகை யூரே" (Durai Samippillai, 1947)

பறிக்கப்பட்டக் கீரையானது வாடி வதங்கிக் காணப்படும் மரத்திலிருந்து வெட்டப்பட்ட விறகு உலர்ந்து கெடும். மானைப் போன்ற சாயலும் கருமை நிறமும் கொண்ட மனைவியோடு கூடி வாழும் மாதளிர் சீறூர் மன்னனின் ஊர். எனவே சீறூர் மன்னர்களின் பொருளாதாரம் அவர்களின் சமுதாயத்தோடு தொடர்புடையதாக மட்டுமே இல்லாமல் தாம் சார்ந்து வாழும் வேந்தர் சமுதாயத்தைச் சார்ந்தும் இருந்துள்ளமை இதன்வழி தெளிவாகிறது.

## சீறூர் சமூகம் உடைமைச் சமூகமாதல்

புன்புல விளைநிலத்தின் மூலம் கிடைக்கும் சொற்ப வருவாயையுடைய சீறூர் சமூகம் பொருளாதார நிலையில் தாழ்ந்து காணப்பட்டது. 'சங்ககாலச் சூழலில் மருதநிலச் சமுதாயத் தலைவர்களாய் உயர்ந்த வேந்தர்கள் காரி போன்ற குறுநில மன்னரைப் போரில் பயன்படுத்திக் கொண்டதைப் போல் வீரநிலைச் சமுதாயமான சீறூர் மன்னரின் சமுதாயத்தையும் பயன்படுத்திக் கொண்டனர். அச்சமுதாயத் தலைவர்களை வேந்துவிடு தொழிலுக்கு உட்படுத்திய தன் அடுத்த நிலையாக அவர்களைத் தங்களின் நிரந்தரப் படைத்தலைவர்களாய் உயர்த்திக்கொள்ள முயன்றதன் விளைவே தண்ணடை நல்கல் எனும் சமுதாயச் செயல்பாட்டுக்குக் காரணம்" பொருளாதார நிலையில் தாழ்ந்து காணப்பட்ட சமூகம் பொருளாதார நிலையிலிருந்து உயர வேந்துவிடு தொழில் ஏதுவாக அமைந்தது (Mathaiyan, 2012). 'சமுதாயத்தின் உணவுத் தேவையை மட்டுமே நிறைவு செய்வதாகச் சமுதாய நல நோக்கமாக இருந்த இனக்குழுச் சமுதாயப் பண்பு காலப்போக்கில் நிலக்கொடை பெறும் உடைமை நோக்கமாக நிலவுடைமைப் பண்பாக மாறிப்போயுள்ளது" வேந்துவிடு தொழிலின் மூலம் வேந்தருக்கு ஈட்டித்தரும் வெற்றியின் பயனாகச் சீறூர் மன்னர்கள் தண்ணடைப் பெற்றுப் படைத்தலைவர்களாக அதன்வழியாகப் பொருளாதார முடிவுப்பெற்று முதுகுடி சமூகமாக மாறியதைக் கீழ்க்கண்ட பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன (Mathaiyan, 2012).

'தண்ணடை பெறுதல் யாவது படினே"

'தண்ணடை பெறுதலு முரித்தே" (Durai Samippillai, 1947)

மறவர்கள் மன்னரின் பொருட்டு போரிட்டு வெற்றியை ஈட்டித் தருவாராயின் குளிர்ச்சி பொருந்திய மருதநிலத்து ஊர்களைப் பெறுவது உறுதி என்றும் மறப்பண்பான வேந்துவிடு தொழிலின் மூலம் மருதநிலத்து ஊர்களைப் பெற்றனர் என்றும் மேற்கண்ட பாடல்கள் விளக்குகின்றன. புன்புல உரிமையாளர்களான சீறூர் மன்னர்கள் தண்ணடை பெறுதல் என்னும் செயலால் மருதநிலத்தூர்களைப் பெற்று முதுகுடி மன்னர்களாக வளர்ச்சியடைந்தனர் என்பது இதன்வழி தெளிவாகிறது.

## இனக்குழு சமுதாய அழிவு

தொடக்கம் என்பது ஒன்றின் வளர்ச்சிக்கு முதல்படியாக இருப்பதைப் போலவே முடிவு என்பது ஒன்றன் அழிவுக்குக் காரணமாக அமைகிறது. ஆதிகால மனிதனின் சமுதாய அமைப்பின் தோற்றத்திற்கு இனக்குழு சமுதாயம் தொடக்கமாக இருக்குமானால், முதுகுடி சமுதாயத்தின் தோற்றத்திற்கு இனக்குழு சமுதாயத்தின் அழிவு காரணமாகிறது. வேந்தரின் பொருட்டு வேந்துவிடு தொழிலில் ஈடுபட்ட சீறூர் மன்னர்களுக்கு வெற்றி என்பது நிரந்தரமானதல்ல தோல்வியும் உண்டு. அவர்கள் போரில் வீரமரணமடைந்ததும் உண்டு. சீறூர் மன்னருக்கும் குளிர்ச்சிப் பொருந்திய மருத நிலத்தையாளும் வேந்தருக்கும் இடையே போர் நடைபெற்றதை வல்லாண் முல்லையிலமைந்த கீழ்க்கண்ட பாடல்வரிகள் எடுத்துரைக்கின்றன.

'தண்பணை யாளும் வேந்தர்க்குக்

கண்படை யீயா வேலோ னூரே" (Durai Samippillai, 1947)

தண்பணை ஆளும் வேந்தர் என்பது மருத நிலத்தை ஆளும் முதுகுடி மன்னர்களையும் வேலோன் என்பது மறப்பண்பை உடைய சீறூர் மன்னர்களையும் சுட்டுகிறது. மருதநிலத்து ஊர்களை ஆட்சிசெய்யும் வேந்தருக்குக் கண்ணுறக்கத்தைத் தராத அச்சத்தையுடைய வேலோனாகச் சீறூர்

மன்னன் காணப்படுகிறான் எனப்படுவதால் முதுகுடி மன்னருக்கும் சீறூர் மன்னருக்குமிடையே போர் நடைபெற்றுள்ளமையை அறிந்துக்கொள்ள முடிகிறது. இப்படிப்பட்ட போரின் விளைவாக இனக்குழு சமூகம் அழிவை எய்தியிருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும் பேரரசரிடம் இனக்குழு தலைவன் போரிட்டதை விரியூர் நக்கனாரின் கீழ்க்கண்ட மூதின்முல்லை பாடலானது கூறுகிறது.

'மறவன் வேலோ பெருந்தகை யுடைத்தே

கிருங்கடற் றானை வேந்தர்

பெருங்களிற்று முகத்தினுஞ் செலவா னாதே" (Durai Samippillai, 1947)

மறப் பண்பை உடைய சீறூர் மன்னன் எறிந்த வேலானது பெரிய கடலைப் போன்ற படையை உடைய வேந்தரின் மார்பிலும் யானையின் முகத்திலும் சென்று பாய்ந்தது. சீறூர் மன்னர்கள் தன்னிச்சையாகத் தானே வேந்தருடன் போரிட்டுள்ளனர். 'இனக்குழுக்களுக்குள் நிகழ்ந்த மோதலைவிட இனக்குழுக்கள் பேரரசுடன் மிகுதியும் மோதியுள்ளன. போரின் மூலமும் நட்பின் மூலமும் பேரரசுகள் இனக்குழு மக்களின் நிலப்பகுதிகளை தம்முடைய நிலப்பகுதிகளில் இணைத்துக் கொண்டுள்ளன" (Palanivelu, 2010). 'இனக்குழுக்கள் முற்றிலும் அழிந்த பிறகு ஒரே சீரான சமுதாய அமைப்பு நிலை கொண்டு இயங்கியது. அதுதான் நிலவுடைமைமுறை" (Vanamamalai, 2008). இவ்வாறு ஒரு சமூகம் மற்றொரு சமூகத்துடன் போரிட்டதன் காரணமாக ஒரு சமூக மற்றொரு சமூகத்தின் அழிவுக்குக் காரணமாக அமைந்தது எனலாம். இவ்வகையில் வீரமரணமடைந்த சமூகமாகச் சீறூர் சமூகம் இருந்த நிலையில் அழிவை எய்தியது.

## முடிவுரை

சீறூர் மன்னர்களின் இயற்பெயர்கள் சங்கப்பாடல்களில் எங்கும் காணப்படவில்லை. இது சீறூர் சமுதாயத்தில் காணப்படும் பெயர் சுட்டாத மரபினை உணர்த்துகிறது. சீறூர் மன்னர் என்ற பொதுப்படையான பெயரும்; மூதிலாளன், வருவிருந்தயரும் விரும்பினள் கிழவன், காளை, நெடுந்தகை, வண்மையோன், வல்லன், மறவன், இறைவன், கைம்மான் வேட்டுவன், குருசில், வேலோன் என்ற பண்புப் பெயர்கள் காணப்படுகின்றன என்பது தெளிவாகிறது. சீறூர் மக்கள் வசிக்கும் ஊர் சீறூர் மற்றும் ஊர் என இரு நிலைகளில் சங்கப்பாடல்களில் கையாளப்படுகிறது. சீறூர் குடியிருப்புகளையும்; அதன் அமைப்பினையும்; பொருளாதார நிலையையும் கூறுபவையாகக் காணப்படுகின்றன. இக்குடிகள் இயற்கையான அரணை உடையதாகவும்; சிறிய குடில்களைக் கொண்டவையாகவும்; நெல்விளையாத புன்செய் நிலமாகவும் வரி செலுத்த இயலாத அளவிற்குச் சொற்ப வருவாயை உடையதாகவும்; அரிதாகிய நீர்நிலைகளை உடையதாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெளித்துணர முடிகிறது. சீறூர் மன்னனின் ஊர் நெடுந்தகை ஊர், பெருந்தகை ஓம்பும் ஊர், குருசிலோம்பும் ஊர், வேலோன் ஊர் என சீறூர் மன்னனின் பண்பைக் கொண்டு குறிப்பிடப்பட்டுள்ளன. சீறூர் மன்னர் தன் உடைமையான வாளினைப் பிறரிடம் பணையம் வைத்து அதன் மூலம் கிடைக்கும் பொருளைக் கொண்டு பாணருக்குக் கொடை கொடுத்தனர் என்பதால் அவர்கள் கொடைக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை உணரமுடிகிறது. சீறூர் மன்னர்கள் தன்னிடம் உள்ளதைப் பிறருக்குக் கொடுத்து வறுமைநிலையை அடைந்துள்ளனர். தான் வறியவரான பின்னரும் தன் ஊரில் உள்ள உடைமையாளர்களிடம் பொருளைப் பெற்று வாழ்ந்துள்ளனர் என்பது தெரிகிறது. சீறூர் மன்னர்களின் மனைவி சமூகத்தோடு தொடர்புடையவராகக் காணப்படுவதால் இவர்களின் விருந்தோம்பல் மட்டுமே சிறப்பாகப் பேசப்படுகிறது என்பது உறுதி. சீறூர் மன்னன் சொற்ப வருவாயை உடையவனாகக் காட்டப்பட்ட நிலையில் இருந்து வேந்துவிடு தொழில் மூலம் கிடைத்தப் பொருளைப் பிறருக்குக் கொடையாக வழங்கும் தன்மை உடையவனாகவும் காட்டப்படுகிறான் என்பது தெளிவாகிறது. சீறூர் மன்னர்களின் பொருளாதாரம் அவர்களின் சமுதாயத்தோடு தொடர்புடையதாக மட்டுமே இல்லாமல் அவர்கள் சார்ந்து வாழும் வேந்தர் சமுதாயத்தைச் சார்ந்தும் காணப்பட்டது என்பது தெளிவாகிறது. புன்புல உரிமையாளர்களான சீறூர் மன்னர்கள் தண்ணடைப் பெறுதல் என்னும் செயலால் மருதநிலத்து ஊர்களைப் பெற்று முதுகுடி மன்னர்களாக வளர்ச்சியடைந்தனர் என்பதை அறியமுடிகிறது. ஒரு சமூகம் மற்றொரு சமூகத்துடன்

போரிட்டதன் காரணமாக ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின் அழிவுக்குக் காரணமாக அமைந்தது எனலாம். முதுகுடி மன்னருக்கும் சீறூர் மன்னருக்குமிடையே போர் நடைபெற்றுள்ளது. இப்படிப்பட்ட போரின் விளைவாக இனக்குழு சமூகம் அழிவை எழுதியிருக்கிறது என்பது தெளிவாகிறது.

## References


Durai Samippillai. Ovvai Su., (1947), Purananuru Mulamum Uraiyum, (2007), Saiva Citthanta Nulpatippuk Kalagam, India.

Irames, Ka., (2016) Sanka Ilakkiyaththil Araciyal, Tamilthurai, Iraṇimeri Kalluri, Chennai, India.

Kailasapathi, Ka., (2018), Tamil Viranilaik Kavithai, Kumaran Puththaka IiIam, Kolumpu – Chennai, India.

Mathaiyan, Pe., (2009) Tamilc Sevviyal Pataippukal, New Century Book Hoiuse, Chennai. India.

Mathaiyan, Pe., (2012) Sankakala Inakkuzhu Samuthayamum Arasu Uruvakkamum, Pavai Publications, Chennai, India.

Palanivelu, Ke., (2010), Sanka Ilakkiyam Paṭṭu Marapum Eluththu Marapum, New Century Book Hoiuse, Chennai. India.

Pirapu, A., (2017), Samukap Panpattu Nokkil Sankakkalac Sirrur Valviyal, Sollankati, Chennai, India.

Raj Kauthaman, (2008), Tamil Samukaththiil Aramum Atralum, (2008) Vitiyal Patippakam, Kovai, India.

Suppiramaṇiyan. Ka., (2011), Sankakalac Samuthayam, (2011), New Century Book Hoiuse, Chennai. India.

Vanamamalai.Na., (2008), Tamilar Panpatum Thaththuvamum, (2008), Alaikal Veliyittakam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License